## November 16, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சென்னை பெருநகர மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
   i. நாட்டிலேயே முதல்முறையாக சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கான இலவச உணவு வழங்கும் திட்டம் தொடக்க நிகழ்ச்சி கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.
   ii. முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று உணவு வழங்கும் திட்டத்துக்கான வாகனங்களைக் கொடியசைத்து தொடங்கிவைத்தார். பின்னர், தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பான உணவு பெட்டகங்களையும் அவர் வழங்கினார்.
   iii. சென்னை மாநகராட்சியில் தினமும் 31,373 தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கப்படவுள்ளது. அதற்காக ஆண்டுக்கு ரூ.64 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
   iv. பெருநகர சென்னை மாநகராட்சியில் காலை, மதியம் மற்றும் இரவு என சுழற்சி முறையில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கப்படும்.
   v. நிரந்தர மற்றும் சுயஉதவிக் குழு தூய்மைப் பணியாளர்கள், மலேரியா தடுப்பு தொழிலாளர்கள், தூய்மைப் பணிக்கான தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள், மயான பூமி தூய்மைப் பணியாளர்கள், தனியார்-பொதுப் பங்களிப்பில் செயல்படும் கழிப்பறைகளை சுத்தம் செய்யும் பணியாளர்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், மாநகராட்சியில் களப்பணிகளில் ஈடுபடும் சாலைப் பணியாளர்கள் என மொத்தம் 31,373 பேருக்கு சுகாதாரமான உணவு வழங்கப்படும்.
   vi. வாகனங்கள் மூலம் உணவுப் பெட்டகம் விநியோகிக்கப்படும். தனியார் நிறுவனம் மூலம் தயாரிக்கப்படும் உணவு, வெப்பம் தாங்கும் பைகளில், சிற்றுண்டி தாங்கி பெட்டிகள் மூலம் வழங்கப்படவுள்ளது.
2. நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க மறுப்பு தெரிவித்ததற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
   i. நீட் தேர்வால் தமிழகத்தில் மாணவர்கள் பாதிக்கப்படுவது தொடர்பாக ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் நீட்தேர்வுவிலக்கு மசோதா கடந்த 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் 13-ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்காக தமிழக ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால், அந்த மசோதாவை கடந்த 2022 பிப்ரவரி 1-ஆம் தேதி தமிழக சட்டப்பேரவைக்கு ஆளுநர் திருப்பி அனுப்பி இருந்தார்.
   ii. அதையடுத்து, 2022 பிப்ரவரி 8- ஆம் தேதி மீண்டும் நீட் விலக்கு மசோதாவை நிறைவேற்றி ஆளுநருக்கு தமிழக அரசு மீண்டும் அனுப்பிவைத்தது. இந்நிலையில், குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஆளுநர் அனுப்பிவைத்தார்.
   iii. இதற்கிடையில் கடந்த ஏப்ரல் மாதம் தமிழக அரசின் நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க குடியரசுத் தலைவர் மறுப்புத்

தெரிவித்திருந்தார்.

iv. குடியரசுத் தலைவரின் அந்த முடிவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்துள்ளது. மனுவில், 'தமிழக அரசு அனுப்பிவைத்த மசோதா மீது சுமார் 1,400 நாள்களுக்கும் அதிகமாக எந்த முடிவும் எடுக்காமல் குடியரசுத் தலைவர் காலதாமதம் செய்திருக்கிறார்.

v. மேலும், மசோதாவை நிராகரித்ததற்கான காரணம் எதையும் அவர் தெரிவிக்கவும் இல்லை. இது உச்சநீதிமன்றம் ஏற்கெனவே வழங்கி உள்ள தீர்ப்புகளுக்கு எதிரானதாக இருக்கிறது. மேலும், மசோதாக்கள் மீது குடியரசுத் தலைவர் அதிகபட்சம் மூன்று மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கக்கூடிய நிலையில், அதன் அடிப்படையில் குடியரசுத் தலைவரின் முடிவை நிராகரிப்பதுடன் மசோதாவுக்கு உச்சநீதிமன்றமே ஒப்புதல் வழங்க வேண்டும்' என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

3. காஸாவுக்குள் நிவாரணப் பொருள்கள் செல்வதைத் தொடர்ந்து கட்டுப்படுத்துவதன் மூலம் சர்வதேச சட்டங்களை இஸ்ரேல் மீறுவதாக பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. பிரிவான யுஎன்ஆர்டபிள்யுஏ-வின் துணைப் பொதுச் செயலர் நடாலி பூக்ளி தெரிவித்துள்ளார்.

i. யுஎன்ஆர்டபிள்யுஏ-விடம் தற்போது உணவு, கூடாரங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் 6,000 லாரிகளுக்கு சமமான அளவில் உள்ளன. குளிர்காலம் நெருங்கிவரும் நிலையில் பஞ்சம் மக்களைத் தொடர்ந்து வாட்டிவருகிறது. எனவே இந்தப் பொருள்கள் அனைத்தும் உடனடியாக காஸாவுக்குள் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

ii. காஸாவுக்கு தினமும் 500 முதல் 600 நிவாரண லாரிகள் தேவைப்படுகின்றன. ஆனால் அதில் பாதி அளவுகூட அனுமதிக்கப்படுவதில்லை. இதன் மூலம் இஸ்ரேல் சர்வதேச சட்டங்களை மீறுகிறது.

iii. ஆக்கிரமிப்பு சக்தியாக உள்ள இஸ்ரேல் சர்வதேச மனிதாபிமானச் சட்டம், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை கடைப்பிடிக்கவில்லை என்றார் அவர்.

iv. யுஎன்ஆர்டபிள்யுஏ அமைப்பு ஹமாஸ் படையினரால் ஊடுரு வப்பட்டுள்ளது, அதன் மையங்கள் பயங்கரவாதிகளால் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டி, அந்த ஐ.நா.பிரிவுடனான உறவை இஸ்ரேல் துண்டித்துள்ளது நினைவு கூரத்தக்கது.

v. 1948-இல் இஸ்ரேல் நாடு உருவானபோது வன்முறை காரணமாக இடம்பெயர்ந்த
7 லட்சம் பாலஸ்தீன அகதிகளுக்கு உதவுவதற்காக தொடங்கப்பட்ட யுஎன்ஆர்டபிள்யுஏ, சுமார் எண்பது ஆண்டுகளுக்குப் பிறகும் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகள் மற்றும் அண்டை நாடுகளில் பதிவு செய்யப்பட்ட 59 லட்சம் பாலஸ்தீன அகதிகளுக்கு சுகாதாரம், கல்வி, சமூக நலன் உள்ளிட்ட சேவைகளை வழங்கும் முக்கிய நிறுவனமாக செயல்பட்டுவருகிறது.

4. அமெரிக்காவுக்கு இறக்குமதியாகும் மாட்டிறைச்சி, காபி உள்ளிட்ட ஏராளமான உணவுப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த கூடுதல் வரியை நீக்குவதாக அந்தநாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

i. இரண்டாவது முறை அதிபர் பொறுப்பை ஏற்றதில் இருந்து, நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதாகக் கூறி அமெரிக்காவுக்கு பிற நாடுகள் ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு மிகக்கடுமையான கூடுதல் வரிகளை டிரம்ப் விதித்தார். இது, இறக்குமதி பொருள்களின் விலையை அதிகரித்தது.

முக்கிய உணவுப் பொருள்களின் விலைகளும் வெகுவாக உயர்ந்ததால்பொது மக்கள் அவதிக்குள்ளாகினர்.

ii. இந்த நிலையில், மாட்டிறைச்சி, காபி வெப்பமண்டல பழவகைகள் உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருள்கள் மீதான கூடுதல் இறக்குமதி வரியை ரத்து செய்வதாக டிரம்ப் தற்போது அறிவித்துள்ளார்.

5. டாஃபே நிறுவனத்தின் தலைவரும், நிர்வாக இயக்குநருமான மல்லிகா ஸ்ரீனிவாசன் வகிக்கும் பொதுத் துறை நிறுவனங்கள் தேர்வு வாரிய (பிஇஎஸ்பி) தலைவர் பொறுப்பு மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

i. பிஇஎஸ்பி தலைவர் பதவிக்கு மல்லிகா ஸ்ரீனிவாசன் கடந்த 2021- ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்டார். தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் அவ்வாறு நியமனம் செய்யப்பட்டது அதுவே முதல்முறை.

ii. முதலில் அவரின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பின்னர் அது கடந்த ஆண்டு நவம்பரில் நீட்டிக்கப்பட்டது. அந்தப் பதவிக் காலம் வரும் 18-ஆம் தேதியுடன் நிறைவடையும் நிலையில், தற்போது அது மீண்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

6. பில்லி ஜீன் கிங் கோப்பை டென்னிஸ் விளையாட்டுடன் தொடர்புடையது.

7. சர்வ தேச குத்துச்சண்டை சம்மேளனம் சார்பில் உலகக் கோப்பை குத்துச் சண்டை ஃபைனல்ஸ் 2025 புது தில்லி அடுத்த கிரேட்டர் நொய்டாவில் தொடங்கியது.

i. கடந்த 2023-இல் உலக சாம்பியன்ஷிப் போட்டி நடத்தப்பட்டதை தொடர்ந்து தற்போது ஃ பைனல்ஸ் நடைபெறுகிறது. இந்திய அணியில் உலக சாம்பியன் மீனாட்சி ஹூடா, ப்ரீதி, நரேந்தர் பெர்வால், அங்குஷ் பங்கால் உள்ளிட்டோர் முதல் நாளில் தங்கள் திறமையை வெளிப்படுத்த காத்துள்ளனர்.

ii. பாக்சிங் இந்தியா தலைவர் - அஜய் சிங்

8. அமெரிக்க கடற்படையின் மூத்த அதிகாரிகளுடன் இந்திய கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே.திரிபாதி ஆலோசனை மேற்கொண்டார்.

i. அப்போது இந்தோ பசிபிக் கடல் பிராந்தியத்தில் இந்தியா-அமெரிக்கா இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

ii. இந்த ஆலோசனையில் 'மலபார்' மற்றும் 'மிலன்' ஆகிய இருதரப்பு மற்றும் முத்தரப்பு கடற்படை பயிற்சிகளின் முக்கியத்துவம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

9. ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் துணை அமைப்புகள் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும் என இந்தியா வலியுறுத்தியது.

i. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் செயல்முறைகள் குறித்து நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ஐ.நா.வுக்கான இந்திய தூதர் பர்வதனேனி ஹரீஷ், 'ஐ.நா. கட்டமைப்பின் மையப்புள்ளியாக விளங்கும் பாதுகாப்பு கவுன்சில் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

ii. உலகளவில் பல்வேறு சவால்கள் மற்றும் சிக்கல்களை இந்த அமைப்பு எதிர்கொள்கிறது. எனவே, பாதுகாப்பு கவுன்சில் மற்றும் அதன் கிளை அமைப்புகள் மிகவும் வெளிப்படைத்தன் மையுடன் செயல்பட வேண்டியது அவசியம்.

iii. 80 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் இந்த அமைப்பில் காலத்துக்கேற்ப சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். நிரந்தர மற்றும் நிரந்தரமில்லா உறுப்பினர் வகைப்பாட்டை விரிவாக்கம் செய்து இதுவரை பிரதிநிதித்துவம் இல்லாத நாடுகளையும் சேர்க்க வேண்டும்.

iv. ஐ.நா. பொதுச் சபை உள்பட பிற அமைப்புகள் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு

*முழு ஒத்துழைப்பை வழங்க இந்தியா வலியுறுத்துகிறது. அதன்படி, பொதுச் சபையில் பாதுகாப்பு கவுன்சில் அறிக்கைகள் தொடர்பாக விரிவான விவாதம் நடத்துவது பயனளிக்கும்' என்றார்.*